தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 16.07.2024 அன்று காணொலிக்காட்சி வாயிலாக உயர்கல்வித்துறை சார்பில், புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியம், துளையனூர் கிராமத்தில், ரூ.12.46 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டடத்தினையும் மற்றும் ஆலங்குடி பேரூராட்சி, கீழாத்தூர் கிராமத்தில், ரூ.12.40 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டடத்தினையும் திறந்து வைத்தார். அதனைத்தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஐ.சா.மெர்சி ரம்யா தலைமையில் கலந்துகொண்டார். உடன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திருமதி.ஜெயலட்சுமி தமிழ்செல்வன், மண்டல இணை இயக்குநர் (கல்லூரிகள்) பொன்.முத்துராமலிங்கம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, நீலகிரி மாவட்டம், குன்னூர் ஊராட்சி ஒன்றியம், மேலூர் ஊராட்சி, உட்லாண்ஸ் அரசு உதவி பெறும் தொடக்கப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் 15.07.2024 அன்று தொடங்கி வைத்து, பள்ளி கு7ழந்தைகளுக்கு காலை உணவினை வழங்கி, கலைஞரின் கனவு இல்லத் திட்டத்தின் கீழ் 7 பயனாளிகளுக்கு தலா ரூ.3.53 இலட்சம் மதிப்பில் வீடுகள் கட்டுவதற்கான வேலை உத்தரவு ஆணைகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், மாவட்ட ஊராட்சி தலைவர் பொன்தோஸ், மகளிர் திட்ட இயக்குநர் காசிநாதன் உட்பட பலர் உள்ளனர்.

தஞ்சை மாவட்டம் - வளம்பக்குடி அருகே

சாலை விபத்தில் உயிரிழந்த குடும்பங்களுக்கு நிதியுதவி - ஆறுதல்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஜூலை 19 -

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், வளம்பக் குடி அருகில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரி ழந்தவர்களின் குடும்பத் தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், வளம்பக் குடி அருகில் நேற்று முன்தினம் (17.07.2024) காலை சுமார் 7.00 மணி யளவில் கந்தர்வகோட் டையில் இருந்து சமயபுரம் கோவிலுக்கு பாதயாத்தி ரையாக சென்றுகொண்டி ருந்தவர்கள் மீது எதிர்பாரா தவிதமாக ஈச்சர் வாகனம் மோதிய விபத்தில் புதுக் கோட்டை மாவட்டம், கந் தர்வகோட்டை வட்டம், கல்லாக்கோட்டை ஊராட்சி, கண்ணுகுடிபட்டி யைச் சேர்ந்த முத்துசாமி (வயது 60) த/பெ.சின் னையன், திருமதி. ராணி (வயது 37) க/பெ. முரு கன், திருமதி. மோகனாம் பாள் (வயது 27) க/பெ. ரமேஷ் மற்றும் திருமதி. மீனா (வயது 26) க/பெ. கார்த்திக் ஆகிய நான்கு நபர்கள் சம்பவ இடத்தி லேயே உயிரிழந்தனர். மேலும், இவ்விபத்தில் திருமதி. தனலட்சுமி (வயது 36) க/பெ. செல்வ ராஜ் என்பவர் பலத்த காய மடைந்து சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழி யில் உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியி னைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

இவ்விபத்தில், பலத்த காயமடைந்து தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் திருமதி. சங் கீதா க/பெ.கவியரசன் என் பவருக்கு சிறப்பு சிகிக்சை அளிக்க உத்தரவிட்டுள் ளேன்.

இந்த விபத்தில் உயிரி ழந்தவர்களின் குடும்பத் தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை யும், ஆறுதலையும் தெரி வித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபா யும், காயமடைந்து மருத் துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவருக்கு ஒரு இலட்சம் ரூபாயும் முதல மைச்சரின் பொது நிவா ரண நிதியிலிருந்து வழங் கிடவும் உத்தரவிட்டுள் ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

மயிலாடுதுறை மாவட்டம் - செம்பனார் கோயில் ஒன்றியம் -

பரசலூரில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம்!

அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தொடங்கி வைத்தார்! நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

மயிலாடுதுறை, ஜூலை 19–

மயிலாடுதுறை மாவட்டம் செம் பனார்கோயில் ஒன்றியம் பரச லூர் அரசு உதவி பெறும் நடுநி லைப்பள்ளியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அரசு உதவிப் பெறும் பள்ளிகளுக்கு விரிவு படுத்தப்பட்ட காலை உண வுத் திட்டத்தை சுற்றுசூழல் மற் றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் தொடங்கி வைத்தார்.

திருவள்ளூர் மாவட்டம் கீழச் சரியில் உள்ள அரசு உதவிப் பெறும் பள்ளியில் நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உதவி பெறும் பள்ளிக ளுக்கு விரிவு படுத்தப்பட்ட முதல மைச்சர் காலை உணவுத் திட் டத்தை தொடங்கி வைத்த தையடுத்து, மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கான முதல மைச்சர் அவர்களின் காலை உணவு திட்ட தொடக்க விழா மயி லாடுதுறை மாவட்டம் செம்ப னார்கோயில் ஒன்றியம் பரசலூர் அரசு உதவி பெறும் நடுநிலைப் பள்ளியில் நடைபெற்றது.

விழாவிற்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.பி. மகாபாரதி தலைமை தாங்கினார்.

மயிலாடுதுறை மாவட்டக் கழ கச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் முன்னிலை வகித் தார்.

அரசு உதவிபெறும் பள்ளிக ளுக்கு விரிவுபடுத்தப்பட்ட முதல மைச்சர் அவர்களின் காலை உணவுத் திட்டத்தை சுற்றுசுழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தொடங்கி வைத்து பேசுகையில் தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பு ஏற்றப்போது கொரோனா தொற்று காரணமாக பள்ளிகள் மூடப்பட்ட நிலையில் கொரோனாவை கட்டுப்படுத்தி பள்ளி, கல்லூரியை திறக்க செய் தார். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 3 ஆண்டுகளில் பள்ளி கல்லூரிக்கு பெரும் தொகை ஒதுக்கீடு செய்து பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்ப டுத்தி காட்டியுள்ளார். பள்ளிக ளுக்கு புதிய கட்டிடங்கள், சுற்றுச் சுவர்கள் உட்கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொடக்க, நடுநிலைபள்ளிகளுக்கு 20 ஆயிரம் திறன்மிகு வகுப்பறை கட்டப்பட் டுள்ளது. 1026 ஆசிரியர்களுக்கு கையடக்க கணினி ரூ. 1கோடியே 30 லட்சம் மதிப்பில் வழங்கப்பட் டுள்ளது. தமிழ்நாடு முதலமைசசர் அவர்கள் கல்விக்கு அதிக முக்கி யத்து வம் கொடுத்து வருகிறார். பேரறிஞர் அண்ணா அவர்கள் அறிவாலும், ஆற்றலாலும் ஆகாத காரியம் இல்லை என்று சொன்னார். தந்தை பெரியார் அவர்கள் மானமும், அறிவும் மனி தர்க்கு அழகு என்று சொன்னார். முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் கல்வியால் மட்டும் சமுத்துவ சமுதாயத்தை அமைக்க முடியும் என்றார். அந்த அடிப்படையில் தமிழ்நாடு முத லமைச்சர் அவர்கள் இளைய சமு தாயத்திற்கு கல்வியை தந்தால் தான் அவர்கள் பொருளாதாரம், வேலை, புகழ், சமுதாயத்தில் அனைவராலும் மதிக்கப்படுவர் கள். தமிழ்நாட்டில் பள்ளிகல்வித் துறை மட்டுமல்லாமல் உயர்கல் விக்கும் இன்றைக்கு பொற்காலமாக உள்ளது. தமிழக முதலமைச்சர் அவர்கள் கிட்டத் தட்ட 31 கலை அறிவியல் கல்லூ ரியை திறந்த வைத்துள்ளார்கள்.

அதோடு மட்டுமல்லாமல் மயி லாடுதுறை மாவட்டத்தின் நீண்ட நாள் கனவாக இருந்த ஒரு மருத் துவக் கல்லூரி வேண்டும் என்பதை அறிந்து அதுவம் இன் றைக்கு அனுமதி பெறப்பட்டு அதற்கான இடத்தையும் தோர்வு செய்யும் நிகழ்வையும் பெற்று தந்தவர் நம் தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள். ஏழை, எளிய, அடித்தட்டு மக்கள் படிக்கக்கூடிய மருத்துவக்கல்லூரி இது போன்ற முதலமைச்சரின் கனவு மிகச்சிறந்த அறிவார்ந்த சமுதாய மாக உருவாக்க வேண்டும் என்ற கனவு மிகச்சிறந்த அறிவார்ந்த சமுதாயமாக உருவாக்க வேண் டும். என்ற கனவில் அடிப்படை யில் தான் இன்றைக்கு நடைபெ றும் இந்த விழாவானது கர்மவீரர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நமது தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார்கள். முதலமைச்சரின் காலை உணவு திட்டம் முதலில் தொடக்கப்பள்ளி களில் நடைமுறைபடுத்தப்பட்டு தற்போது அரசு உதவிபெறும் பள் ளிகளில் படிக்கும் மாணவர்கள் பயன் பெறும் வகையில் முதல் வர் அவர்கள் தொடங்கி வைத் துள்ளார். முதற்கட்டமாக நகராட் சியிலும் பிறகு மாநகராட்சி களிலும் தொடங்கி வைத்தார்.

காலை உணவு திட்டம் 31,008 பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கும் கிட்டத்திட்ட 17 லட்சம் மாணவ, மாணவிகள் பயன் பெறும் வகையில் அரசு பள்ளிகளில் காலை உணவு திட் டம் தொடங்கி வைக்கப்பட்ட நிலையில் தற்போது விரிவு படுத்தி அரசு உதவிபெறும் பளிக ளில் படிக்கும் 3,995 பள்ளிகளில் 2,33,536 மாணவர்கள் பயன்பெ றும் வகையில் காலை உணவு திட்டம் விரிவு படுததப்பட்டுள்ளது.

நம் முதல்வர் அவர்கள் மனித நேயம் மிக்கவர், கருணை உள் ளம் கொண்டவர். மக்களுக்கான நல்ல பல திட்டங்களை தந்து கொண்டிருப்பவர் நம்முடை முதல் மைச்சர் அவர்கள். முதலமைச்சர் காலை உணவு திட்டத்தில் மயிலா டுதுறை மாவட்டத்தில் 25.8.2023 அன்று முதல் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் 211 ஊராட்சி மன்றும் பேருராட்சிக ளில் உள்ள 392 அரசு பள்ளிக ளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு செயல் படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் மயிலாடுதுறை மாவட்டத் தில் கிராமப்புறங்களில் உள்ள ஆரம்பப் பள்ளிகளில் பயிலும் 17,107 குழந்தைகள் பயனடை கின்றனர். அரசு உதவி பெறும் பள்கிளுக்கு விரிவு படுத்தப்பட்ட முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தை தமிழ்நாடு முதலமைச் சர் அவர்களால் திருவள்ளுவர் மாவட்டதில் தொடங்கி வைத் துள்ளார்கள்.

இதன் தொடர்ச்சியாக மயிலா டுதுறை மாவட்டத்தில் 99 ஊராட் சியில் 115 அரசு உதவிப்பெறும் பள்கிளில் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 6,691 மாணவ, மாணவிகள் பயனைடவார்கள். மக்களின் தேவைகள் அறிந்து அதை நிறைவேற்றுகின்ற முதல மைச்சர் நமது முதலமைச்சர் அவர்கள்.

இவ்வாறு சுற்றுச்சூழல் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசினார்.

நிகழ்ச்சியில் மயிலாடுதுறை மாவட்ட காவல் கண்காணிப்பா ளர் கே.மீனா, கோட்டாட்சியர் அர்ச்சனா, தலைமைச் செயற் குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, மாவட்டக் கழக துணைச் செயலா ளர்கள் மு.ஞானவேலன், எஸ். செல்வமணி, கண்ணகிபன்னீர், மாவட்டக் கழக பொருளாளர் மகா. அலெக்சாண்டர், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் செல்லசேதுரவிக்குமார், பி.எம். அன்பழகன், மங்கை எம்.சங்கர், எம்.அப்துல்மாலிக், ஞான.இமை யநாதன், அமுர்த.விஜயகுமார், ப.முருகமணி, கு.வைத்திய நாதன், மயிலாடுதுறை நகரக் கழ கச் செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் நத்தம் வின் சென்ட், பி.சிவதாஸ், ஹர்சத், கபிலன், மாவட்ட ஊராட்சி தலை வர் உமாமகேஸ்வரிசங்கர், செம்ப னார்கோயில் ஒன்றியக் குழு தலைவர் நந்தினிஸ்ரீதர், துணைத் தலைவர் பாஸ்கர், மாவட்ட மாண வர் அணி அமைப்பாளர் வி.எஸ். என்.செந்தில், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் துளசிரேகாரமேஷ், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் சௌ.சர்வோத யன், திருக்கடை யூர்செந்தில், மாவட்டப் பிரதிநிதிகள் தென்னர சன், பிரபாகரசன், ஊராட்சி மன்ற தலைவர்கள் சண்முகம், விஸ்நா தன், நாகலிங்கம், மவட்ட கல்வி அலவலர் சாந்தி, மகளிர் திட்ட அலுவலர் செந்தில்நாதன், ஒன்றிய நிர்வாகிகள் சுப்பையன், சரவ ணன், ஒன்றியக் குழு உறுப்பினர் சக்கரபாணி, மடப்புரம்கண்ணன் மற்றும் அரசு துறை அதிகாரிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதி கள், கழகத்தினர் ஏராளமானவர் கள் கலந்து கொண்டனர்.

புதுச்சேரி விவசாயிகளுக்கு சம்பா பருவத்திற்குள்

விதைகள் வழங்காவிட்டால் வேளாண் துறை முன்பு போராட்டம்!

எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா எச்சரிக்கை !

புதுச்சேரி, ஜூலை 19 –

புதுச்சேரி சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

நாட்டின் வளர்ச்சியில் விவசாயம் இன்றியமையாதது. குறைந்த வளங்க ளைக் கொண்டு அதிக உணவை உற் பத்தி செய்கின்ற விவசாயத்தின் முன் னேற்றம் தான் இன்று உணவு உற்பத்தியின் செயல்திறனை அதிக ரித்துள்ளது என்றால் அது மிகையா காது. சுற்றுச்சூழல், சுத்தமான மண், சுகாதாரமான குடிநீர் ஆகியவற்றை பராமரிக்கவும் விவசாயம் பெரிதும் உத வுகிறது. அப்படிப்பட்ட விவசாயத்தை பாதுகாக்க வேண்டிய புதுச்சேரி வேளாண் துறை அலட்சியமாக செயல் படுவது விவசாயிகள் மத்தியில் வருத் தத்தை ஏற்படுத்தி உள்ளதை திராவிட முன்னேற்றக் கழகம் வன்மையாக கண்டிக்கிறது.

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பேணிக்காக்கவும், மண்வளம் பாதிக் கப்படுவதை தடுக்கும் பொருட்டு ஒன் றிய அரசு பசுந்தாள் உர விதைகளை மானிய விலையில் பருவகாலம் தொடங்கும் போதே வழங்க வலியுறுத் துகிறது. ஆனால் புதுச்சேரி அரசின் வேளாண் துறை சம்பா பருவத்தில் விவசாயிகளுக்கு பசுந்தாள் உர விதை களை முன்கூட்டியே வழங்காமல், கொள்முதலுக்கு பிந்தைய மானியமாக வழங்குகிறது. இதனால் சிறு, குறு விவ சாயிகள் பசுந்தாள் உர விதைகளை மொத்தமாக கொள்முதல் செய்ய முடி யாமல் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகு கின்றனர். இதை புதுச்சேரி வேளாண் துறை உணர்ந்து உர விதைகளை சம்பா பருவத்தில் காலத்தோடு மானியத்தில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல் ஆண்டுதோறும் சம்பா பருவத்திற்கு தேவையான நெல் விதை களை முன்கூட்டியே கொள்முதல் செய் யாமல் வேளாண் துறை அலட்சியம் செய்வதால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கின்றனர். ஆண்டுக்கு சுமார் 160 டன் நெல் விதை தேவைப்படுகி றது என்றால் அரசிடம் வெறும் 40 டன் மட்டுமே இருப்பு இருக்கிறது. மீதம் தேவையான 120 டன் நெல் விதை களை கொள்முதல் செய்வதில் காலதா மதம் செய்கிறது. காலத்தோடு கொள் முதல் செய்து அவற்றை விவசாயிகளுக்கு மானியத்தில் வழங் காததால் பருவம் தவறிய நெற்பயிர்கள் அறுவடை செய்யப்படுகிறது. இதே போல், சம்பா பருவத்திற்கு தேவை யான உயிர் உரங்கள், சிங்சல்பேட், வேப்பம் புண்ணாக்கு ஆகியவற்றை உரிய நேரத்தில் வழங்குவதில்லை என்ற குற்றச்சாட்டை விவசாயிகள் தொடர்ந்து வைத்து வருகின்றனர். அதேபோல் ஆடிப்பட்டத்திற்கு தேவை யான காய்கறி விதைகளை ஆடிப்பட் டம் முடிந்த பிறகு வழங்குவதாகவும் வேளாண் துறை மீது புகார் உள்ளது. இதனால் விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்படுகிறது. காலத்தோடு விதைகளை கொள்முதல் செய்ய ஒன் றிய அரசு நிதி ஒதுக்கியும் புதுச்சேரி வேளாண்துறை மெத்தனமாக செயல் படுவது ஏற்புடையதல்ல. அதேபோல் விவசாயிகளுக்கு பாதகம் ஏற்படுத்தும் விதத்தில் கூடுதல் விலைக்கு விற்கும் தனியார் விதை, உர விற்பானையாளர் களை கண்காணித்து தக்க நடவடிக்கை எடுக்கவும் வேளாண் துறை தயங்கக் கூடாது.

புதுச்சேரியில் செல்லிப்பட்டு – பிள் ளையார்குப்பம் இடையே சங்கராப ரணி ஆற்றின் குறுக்கே 1906–ஆம் ஆண்டு பிரெஞ்சுக்காரர்களால் கட்டப் பட்ட பழமையான படுகை அணை கடந்த 2011–ஆண் ஆண்டு அணை யின் நடுப்பகுதி மற்றும் கீழ்தளம் முற்றி லும் சேதமடைந்தது. இதனால் அந்த படுகை அணையில் சேமித்து வைக்கப் படும் தண்ணீர் வீணாக வெளியேறுவ தால், அதை நம்பியுள்ள 20 கிராமங் களில் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ளது. நிலத்தடி நீரை நம்பி யுள்ள ஆயிரக்கணக்கான விவசாய நிலங்கள் பாசன வசதியின்றி அவதி யுற்று வருகின்றன. அணையை புதிய தாக கட்டக்கோரி விவசாயிகள் தொடர்ந்து போராட்டம் நடத்தியும் பல னில்லை. கடந்த ஆண்டு அணை கட்ட ரூ. 20 கோடி ஒதுக்கப்பட்ட நிலையில் இன்னும் அணை கட்டும் பணி தொடங் காமல் இருப்பது விவசாயிகள் மத்தி யில் வேதனையை ஏற்படுத்தி உள்ளது.

விவசாயிகள் மற்றும் பொதுமக்க ளுக்கு நீர் ஆதாரமாக விளங்கும் ஏரி, குளங்கள் தூர்வாரப்பட வேண்டும். பாசன வாய்க்கால்கள் மீதுள்ள ஆக்கிர மிப்புகளை அகற்றி, மழைக்காலத் திற்கு முன்பு போர்க்கால அடிப்படை யில் தூர்வாரப்பட வேண்டும். பொது சுகாதாரத்திற்கு குந்தகம் விளைவிக் கும் வகையில் கழிவுநீரை ஏரி, குளங்க ளில் விடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். புதுச்சேரியின் குடி நீர் ஆதாரமாகவும், சம்பா பருவத்தில் விவசாயிகளுக்கு நீர்பாசனம் அளிக்கக் கூடிய ஊசுட்டேரியை பாதுகாக்க இந்த அரசு தவறிவிட்டது வருத்தம் அளிக்கி றது. ஊசுட்டேரியில் படர்ந்துள்ள ஆகா யத்தாமரைகளை அகற்றி, நிலத்தடி நீரை சேமிக்கின்ற வகையில், ஏரியை ஆழப்படுத்தி மழை நீரை சேமித்து விவ சாயிகளுக்கும், மக்களுக்கு உரிய நேரத்தில் தண்ணீர் வழங்க அரசு பூர் வாங்கப் பணிகளை போர்க்கால அடிப் படையில் மேற்கொள்ள வேண்டும்.

புதுச்சேரி அரசும், வேளாண் துறை யும் விவசாயிகள் நலன் காக்கின்றதாக இருக்க வேண்டும் என்பது தான் எங் கள் எண்ணம். அந்த வகையில் விவ சாயிகளுக்கு உரிய நேரத்தில் விதைக கள், உரங்கள் கொள்முதல் செய்து மானியத்தில் வழங்க வேண்டும். விவ சாயத்திற்கு தேவையான நீரை சேமித்து வழங்குவதற்கு உண்டான வழியை ஆராய்ந்து உரிய நேரத்தில் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து, விவ சாயிகள் பயிரிடும் பொருட்கள் நஷ்ட மில்லாமல் உற்பத்தி செய்ய தேவை யான நடவடிக்கைகளை வேளாண் துறை எடுக்க வேண்டும். தவறும் பட்சத் தில் திராவிட முன்னேற்றக் கழக விவ சாய அணி, விவசாய தொழிலாளர் அணியினர் மாநிலம் முழுவதும் விவசா யிகளை ஒன்றுதிரட்டி போராட்டம் நடத்த தயங்க மாட்டார்கள் என்பதை அரசுக்கு எச்சரிக்கையாக தெரிவித்துக் கொள்கிறேன்.

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் ஒன்றியம், கூடுவாம் பூண்டியில் 'மக்களுடன் முதல்வர்' திட்டத்தை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்து பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்களை வழங்கினார். உடன் ஆரணி எம்.பி. தரணிவேந்தன், மாவட்ட ஆட்சியர் டாக்டர் பழனி, ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் மற்றும் பலர் உள்ளனர்.

கும்பகோணம் பள்ளி தீ விபத்தில் உயிரிழந்த 94 குழந்தைகளின் 20 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, பழைய பாலக்கரையில் அமைந்துள்ள நினைவிடத்தில், கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன் தலைமையிலான தி.மு.க.வினர் மலர் வளையம் வைத்து, புகழஞ்சலி செலுத்தினர். பின்னர், அங்கிருந்து ஊர்வலமாக பள்ளிக்குச் சென்று, அருகே வைக்கப்பட்டிருந்த 94 குழந்தைகளின் புகைப்படத்திற்கு, மலர் வளையம் வைத்து, அஞ்சலி செலுத்தி, அங்கே இருந்தவர்களுக்கு, சிற்றுண்டி வழங்கப்பட்டது. நிகழ்வில், கும்பகோணம் மாநகராட்சி துணை மேயரும், மாநகரச் செயலாளருமான சு.ப.தமிழழகன், கும்பகோணம் ஊராட்சி ஒன்றிய துணைப் பெருந்தலைவரும், மத்திய ஒன்றியச் செயலாளருமான தி.கணேசன், கும்பகோணம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் ஜெ.சுதாகர், மாநகராட்சி ஆணையர் இரா.லெட்சுமணன், பொதுக்குழு உறுப்பினர் இரா.அசோக்குமார், மாநகர துணைச் செயலாளர் ப்ரியம் ஜெ.சசிதரன், பொருளாளர் எஸ்.ரவிச்சந்திரன், துணைச் செயலாளர்கள் எஸ்.சிவானந்தம், டி.செந்தாமரை, மண்டலக் குழுத் தலைவர்கள் கே.என்.எஸ்.ஆசைதம்பி, பாபு (எ) இரா.நரசிம்மன், பகுதிச் செயலாளர்கள் இரா.செல்வராஜ், இரா.கல்யாணசுந்தரம், மு.கண்ணன், நிலைக் குழுத் தலைவர்கள் டி.ஆர்.அனந்தராமன், ச.பார்த்திபன், நடராஜன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், வட்டச் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.